[1995 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 313, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

313—

வைக்கத்தில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா

*38695-திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலம் வைக்கத்தில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பாக கொண்டாடப்படுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாருடைய பிறந்த நாள் விழா தமிழகத்திலே செப்டம்பர் 17-ந் தேதி நடத்தப்படுவதைப் போல கேரள மாநிலம் வைக்கத்திலும் 17-ந் தேதி அரசு விழா கொண்டாட வேண்டும் என இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவு பகலவன் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் அவர்களுக்கு வைக்கத்தில் நினைவகத்தை உருவாக்கி அதை திறந்து வைத்த பெருமை சமூக நீதி காத்த வீராங்கனை, நம் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் கேரளா தவிர வேறு ஏதேனும் மாநிலத்தில் தந்தை பெரியாருக்கு நினைவகம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் நீங்கலாக அண்டை மாநிலத்தில் நம்முடைய மாநிலத்தைச் சார்ந்த தந்தை பெரியாருக்கு மட்டும் அல்ல வேறு எந்தத் தலைவருக்கும் நினைவகம் இல்லை. ஆனால் தந்தை பெரியாரை

பெருமைப்படுத்துகின்ற வகையிலே வைக்கத்திலே சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தி ஆதிதிராவிட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை தகர்த்தெறிந்த தந்தை பெரியாரை பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காக முதல் முறையாக அண்டை மாநிலத்திலே தந்தை பெரியாருக்கு மட்டும்தான் நினைவகம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே அமைக்கப்பட்டது என்பதனை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்திற்கு எவ்வளவு செலவழிக்கப்பட்டது. அந்த நினைவகத்தை பராமரிக்கும் பொறுப்பினை எந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழக அரசின் சார்பிலே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அற்புதமான நினைவகம் ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய பராமரிப்புச் செலவைக் கூட அங்குள்ள மாநிலம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழக அரசுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 314. திரு. கே. முனிவெங்கடப்பன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

314—

தேன்கனிக்கோட்டையில் நிலவள வங்கி தொடங்குதல்

***36189-**திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நிலவள வங்கி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,